# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 26 புதன்கிழமை 09.07.2025 கதிர் 249

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



## ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை வேண்டும்



கொழும்பு, ஜூலை 09

இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைக்கும் பிரேரணையின் போது சபாநாயகரிடம் கோரிக்கை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்வைத்தார்.

சாணக்கியன் முன்வைத்த கோரிக்கைகள்,

சர்ச்சைக்குரிய விடயங்கள் நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் முன்வைக்கப்படும் போது அவர்களின் நாடாளுமன்ற சிறப்புரிமைக்கும் அவர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் நீதி மறுக்கப்பட்டது என்பது நல்லிணக்கத்திற்கு பாதகமான ஒரு விடயம். பொறுப்புக்கூறல் என்பது நல்லிணக்கம் உருவாக முக்கிய விடயமாக உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 300 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

1998/99 காலப்பகுதியில் சோமரட்ன ராஜபக்ஷ எனும் நபர் மொழிந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்மணி பிரதேசத்தில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 15 மனித எச்சங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

இவ் எச்சங்கள் ஸ்கொட்லாந்தில் கிளஸ்கோவில் உள்ளதாக 7

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து பிள்ளையானுக்கு முன்பே தெரியுமாம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 09

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்பது தெரியவந்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

பிள்ளையான் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்தபோதே அவருக்கு இது குறித்து தெரிந்திருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார். 7

## சிறைச்சாலை ஆணையாளர் துஷார உப்புல்தெனிய பிணையில் விடுதலை



கொழும்பு, ஜூலை 09

தகுதியற்ற கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்காக ஆவணங்களை போலியாக தயாரித்தது தொடர்பான குற்றச்சாட்டில் முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் 7

## திருமலை மாநகர சபையின் பதில் ஆணையாளர் நியமனம்



கொழும்பு, ஜூலை 09

திருகோணமலை மாநகர சபையின் பதில் ஆணையாளராக யு.சிவராஜா நியமிக்கப்பட்டார். கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர புதன்கிழமை அன்று குறித்த நியமனக் கடிதத்தை ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். 7

## எம்.பியாக நிசாந்த ஜயவீர சத்தியப்பிராணம்



கொழும்பு, ஜூலை 09

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி நிசாந்த ஜயவீர, பத்தாவது நாடாளுமன்றத்தின் உறுப்பினராக சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் புதன்கிழமை சத்திப்பிரமாணம் செய்துகொண்டார். சபாநாயகர் முன்னிலையில் 7

## சுழியோடிகளின் உதவியுடன் சிறுவனின் சடலம் மீட்பு



கொழும்பு, ஜூலை 09

ஹட்டன் நகருக்கு நீர் வழங்கும் சிங்கமலை நீர்த்தேக்கத்தில் விழுந்து காணாமல் போன பாடசாலை மாணவனின் சடலம் ரங்கல கடற்படையின் சுழியோடிகளால் இன்று மதியம் மீட்கப்பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட மாணவன் கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியில் கல்வி 7



# வாகனங்களின் விலை மீண்டும் பாரியளவில் உயரும் அபாயம்?

கொழும்பு, ஜூலை 09

வாகன இறக்குமதிக்காக அரசாங்கம் முன்னதாகவே ஒதுக்கிய 200 மில்லியன் அமெரிக்க டொலரை பயன்படுத்த நிபந்தனைகள் ஏதும் விதிக்கப்படுமானால், அது உள்ளூர் வாகனச் சந்தையில் பாரிய விலை உயர்வை ஏற்படுத்தும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே எச்சரித்துள்ளார். இறக்குமதிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, ஆரம்பத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டன.

இதனடிப்படையில் வாகன இறக்குமதிக்காக சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள வங்கி நாணயக் கடிதங்களை நிதி நிறுவனங்கள் திறந்துள்ளன.

இந்தநிலையில், மீதமுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் திட்டமிட்டபடி இறக்குமதிக்குக் கிடைக்குமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என, இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார். எனினும், வாகன இறக்குமதி விடயத்தில் தேவையற்ற பயம் உருவாக்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார். வாகன இறக்குமதிக்காக ஒதுக்கப்பட்ட நிதி வரம்பை நீக்குவது குறித்து எந்த கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# எரிபொருள் விநியோக நடவடிக்கையில் சிக்கல்



கொழும்பு, ஜூலை 09

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை தன்னிச்சையாக வேறொரு தரப்பினருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஐக்கிய இலங்கை எரிபொருள் போக்குவரத்து பவுசர் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால், எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என்றும் சங்கத்தின் பொருளாளர் ஜகத் பராக்கிரம தெரிவித்தார்.

இதை உடனடியாக நிறுத்திவிட்டு, வழக்கம் போல் ஏகபோகத்திற்கு உட்படுத்தப்படுவதற்குப் பதிலாக, பொதுமக்களுக்கான சேவையாக போக்குவரத்து சேவைகளை இயக்க அனுமதிக்கவும் என்றார்.(ஐ)

# ஆற்றில் தவறி விழுந்த சிறுவனை காணவில்லை



கொழும்பு, ஜூலை 09

ஹட்டன் சிங்கமலை ஆற்றில் தவறி விழுந்த 17 வயது சிறுவன் காணாமல்போயுள்ளார்.

குறித்த சிறுவன் அந்தப் பகுதிக்குச் சென்று நண்பர்களுடன் புகைப்படம்எடுத்துள்ளார்.

அப்போது அவருக்கு அட்டை கண்டித்துள்ளது. காலில் ரத்தம் கசிந்ததை கண்டு கால்களை கழுவ முற்பட்டபோதே அவர் ஆற்றில் தவறி விழுந்துள்ளார். (ஐ)



# கல்வி சீர்திருத்தங்களை யதார்த்தமாக்க வேண்டும்

கொழும்பு, ஜூலை 09

உத்தேச கல்விச் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு, முழு கல்வி முறையின் வசதிகளையும் மேம்படுத்தும் அதே வேளையில், நிறுவனக் கட்டமைப்பையும் பலப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

உத்தேச புதிய கல்வி சீர்திருத்த செயற்பாடு குறித்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, உத்தேச கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினர்.

கல்வி சீர்திருத்த முன்னெடுப்பை ஆராய்ந்து தேவைக்கேற்ப நிதி ஒதுக்கீடு வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த கல்வி சீர்திருத்தங்களிலிருந்து எதிர்பார்க்கும் இலக்கை அடைய, முழு கட்டமைப்பையும் முழுமையாக மாற்றியமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார். பௌதீக வளங்கள் மற்றும் உள்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் மனிதவள மேம்பாடு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார். முழுமையான ஆய்வுக்குப் பிறகு, திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

மேலும், இந்தச் செயல்பாட்டில், கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் குறித்து கவனம் செலுத்துவதற்கும், கல்வி சீர்திருத்த செயல்முறைக்காக அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி அவர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைப் பெறுவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இதன் முதல் கட்டமாக, இந்த உத்தேச கல்வி சீர்திருத்தத் திட்டம் குறித்து அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இரு விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்தி, அவர்களின் யோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெறுமாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.



கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன, தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நளின் ஹேவகே, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ஐ)

# உப்பால் வெடித்த குழப்பம்



கொழும்பு, ஜூலை 09

விவசாயம், கடற்றொழில் துறைகளை போன்றல்லாமல், இலங்கையில் சில உப்பு உற்பத்தி நிறுவனங்களே உள்ளன. இவ்வாறான சில நிறுவனங்களைக் கையாள முடியாமல், உப்பை இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் அரசாங்கம் உள்ளது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் பொருட்களின் விலை அதிகரிக்கும் வரையில் காத்திருந்து அதன் பின்னர் அவற்றை ,றக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் இந்த விடயம் தொடர்பில் முன்கூட்டியே திட்டமிடல் செய்யப்பட்டிருந்தால், இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது. இந்தச் சூழலில் உப்பின் விலை அதிகரிக்கின்ற வரையில் காத்திருந்து, தற்போது உப்பை ,றக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனை விடவும், நாட்டுக்கு உப்பு கொண்டு வரப்பட்டதன் பின்னரும், அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இதன்படி, தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதா கிருஷ்ணன், கடந்த காலத்தில் உரிய முறையில் திட்டமிடல்கள் ,ல்லாத காரணத்தினாலேயே, பொருட்களை ,றக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

திட்டமிடல்கள் ,ல்லாத காரணத்தினாலேயே, பற்றாக்குறை ஏற்படுவதாகவும், அதனைத் தவிர்ப்பதற்கு வியூகங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (ஐ)

# இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களுக்கு உதவித்தொகை



கொழும்பு, ஜூலை 09


இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சுமூகமான மீள் ஒருங்கிணைப்பிற்கான உதவித் தொகையானது யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபனால் வழங்கி வைக்கப்பட்டது.


மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந. தயாபரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் வைலட் நிக்லஸ் மற்றும் **OfERR (Ceylon)** இணைப்பாளர் இ. பிரபாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**UNHCR** நிறுவனத்தால் **OfERR (Ceylon)** நிறுவனத்தால் 90 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை தலா ஒருவருக்கு வழங்கப்பட்டது.

அந்த வகையில், சாவகச்சேரி, நல்லூர் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் மீளத் திரும்பிய 05 குடும்பங்களைச் சேர்ந்த எட்டுப் பேருக்குமாக ரூபா 7இலட்சத்து 20, ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டது. (ஐ)

# நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குரங்கு தொலலை் அவதிக்குள்ளான மக்கள்





திருகோணமலை கந்தளாயில் குரங்குகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

ஷகுறிப்பாக வாழை, தென்னை, மா, பலா போன்ற பழங்கள் மற்றும் காய்கறிகளை குரங்குகள் அழித்து விடுவதால், விவசாயிகள் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர்.

ஷகந்தளாய் பேராறு, பேராற்று வெளி, அனைக்கட், மதுரசா நகர், ரஜ எல, வான் எல மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் குரங்குகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஷகுரங்குகள் வீடுகளுக்குள் புகுந்து உணவு பொருட்களை சேதப்படுத்துவதும், மனிதர்களை தாக்குவதும் தொடர்கிறது.

ஷவனத்துறை அதிகாரிகள், குரங்குகளை பிடித்து வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

# பிரபாகரனை கண்டுபிடித்த நாட்டில், இவரை கண்டுபிடிக்க முடியவில்லை சாமர சம்பத்



*கொழும்பு, ஜூலை 09*

*பிரபாகரன் இருந்த இடத்தையே கண்டுபிடித்த இந்த நாட்டில், நீதிமன்றத்திற்குள் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தியை கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது ஏன் என்று புரியவில்லை. பொது மக்கள் பாதுகாப்பு டுபாயில் இருந்தே வழிநடத்தப்படுகிறது என புதிய ஜனநாயக முன்னணி உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,*

*இப்போது தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதனையும் கூற முடியாத நிலைமையே உள்ளது. முதலில் மக்களின் பாதுகாப்பு அவசியமானது. அந்தப் பாதுகாப்பு இல்லாமலே உள்ளது.*

*நீதிமன்றத்திற்குள் துப்பாக்கி சூட்டை நடத்திய இஷாரா செவ்வந்தி என்ற பெண் இன்னும் நாட்டுக்குள்ளேயே இருப்பதாக அண்மையில் ஊடக நிகழ்ச்சியொன்றில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். அப்படியென்றால் அந்தப் பெண்ணை ஏன் கைது செய்ய முடியவில்லை.*

*இதுவொரு சிறிய நாடு, பொலிஸ்மா அதிபரையே பிடிக்க முடியுமென்றால், பிரபாகரன் இருந்த இடத்தையே கண்டுபிடிக்க முடியுமென்றால் ஏன் இஷாரா செவ்வந்தியை கண்டுபிடிக்க முடியவில்லை. முடிந்தால் ஒரு மாத காலத்திற்குள் அவரை பிடித்துக்காட்டுங்கள் என்று கோருகின்றோம்.*

*அந்த சம்பவத்தில் 12 பேரை கைது செய்துள்ளதாக கூறினாலும் அதன் பிரதான சூத்திரதாரியை பிடிக்க முடியவில்லை. இப்போது பொதுமக்களின் பாதுகாப்பு டுபாயில் இருந்தே வழிநடத்தப்படுகிறது.*

*அங்கிருந்து தொலைபேசி மூலம் கொலைகளை நடத்துகின்றனர். இறுதியில் அனைவருக்கும் டுபாயில் போய் இருக்கவே வேண்டிவரும். இது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*அத்துடன் அமெரிக்கா ஜனாதிபதியினால் அறிவிடப்பட்ட வரி அவ்வேறே இலங்கையில் செயற்படுத்தப்பட்டால் நிலைமை என்னவாகும். இங்குள்ள ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்படும் நிலைமை ஏற்படும். இதனால் இதனை குறைக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார். (ஐ)*

# நடந்த பாமக செயற்குழுவில் 25 தீர்மானங்கள் நிறைவேற்றம்: அன்புமணி மீது நடவடிக்கை எடுக்க ராமதாசுக்கு அதிகாரம்:





திண்டிவனத்தில் நடந்த பாமக செயற்குழுவில் அன்புமணி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ராமதாசுக்கு அதிகாரம் அளிப்பது உட்பட 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனால் அன்புமணி கட்சியில் இருந்து விரைவில் நீக்கப்படலாம் என்று பாமக வட்டாரத்தில் தகவல்கள் வெளியாகி உள்ளது. பாமகவில் தந்தை ராமதாஸ், மகன் அன்புமணி இடையே ஏற்பட்டுள்ள அதிகார மோதலில் கட்சியை முழுமையாக கைப்பற்றும் நடவடிக்கையில் இருவரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் திண்டிவனத்தில் பாமக நிறுவனர், தலைவர் ராமதாஸ் தலைமையில் செயற்குழு நேற்று கூடியது.

இக்கூட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பாமக கவுரவ தலைவர் ஜி.கே.மணி எம்எல்ஏ, பொதுச்செயலாளர் முரளிசங்கர், பொருளாளர் சையது முகம்மது உசேன், வன்னியர் சங்க தலைவர் பு.தா. அருள்மொழி, மகளிர் அணி சுஜாதா கருணாகரன், அருள் எம்எல்ஏ, சமூகநீதி பேரவை வக்கீல் கோபு உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஒரு சில மாவட்ட தலைவர்கள் மட்டும் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் கட்சிக்கு எதிராக செயல்பட்டு கொண்டிருக்கும் அன்புமணிக்கு கண்டனம் தெரிவிப்பது, விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பது என்பது உள்ளிட்ட 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்படி, தலைமை உத்தரவுக்கு கட்டுப்படாமல் கட்சி நிறுவன மாண்பை மீறியதோடு, நிறுவனரே தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, பொறுப்பற்ற பதிலை சொல்லி பொதுவெளியில் அவருடைய பேச்சுக்கு கட்டுப்படாமல் இருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இச்செயலுக்கு செயல் தலைவர் வருத்தம் கேட்டுக் கொள்வது மட்டுமல்லாமல், பொது வெளியில் கட்சிக்கு மட்டும் களங்கம் விளைவிக்காமல், நிறுவன தலைவருக்கும் களங்கத்தை உருவாக்கும் வகையில் செய்துள்ள செயல் மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை யார் செய்தாலும் அவர்களை கட்சி கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து விசாரிக்கும் என்பதை செயற்குழு முடிவெடுத்து நிறுவன தலைவராக உள்ளவருக்கு அங்கீகாரம் வழங்கி தீர்மானிக்கப்படுகிறது. பாமகவின் புதிய தலைவராக ராமதாஸ் 30.5.2025 அன்று பதவியேற்றது முதல் அவருடைய நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் யாராவது ஏதாவது நடவடிக்கையில் ஈடுபடுவார்களானால் அது சட்டப்படி மட்டுமல்லாமல், கட்சி விதிகளுக்கு முரணானது என்றும், மாநில தலைவர் மற்றும் நிறுவனர் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்ய செயற்குழு மூலமாக தீர்மானிக்கப்படுகிறது.

புதிய தலைவராக ராமதாஸ் பொறுப்பேற்று கொண்ட வகையில், கட்சியின் வளர்ச்சிக்கு தொடர்ந்து அயராது உழைத்து பாடுபட முடிவு செய்திருப்பதால் அவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தலைமை பொறுப்போடு நிறுவன பொறுப்பையும் திறம்பட செய்ய புதிய நிர்வாகிகளை நியமித்து வருகின்ற தேர்தலில், தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தை, கட்சியின் சின்னத்தை திரும்ப பெற்று வீறு நடை போட வேண்டுமானால் நீதிமன்றங்கள் இந்த வழக்குகளை உடனடியாக விசாரித்து தீர்வுகளை அடைய வேண்டும்.

என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் அடுத்த கட்டமாக அன்புமணி மீது ஒழுங்கு நடவடிக்கை பாயும் என்று கூறப்படுகிறது. அதன்படி, அன்புமணி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவரை கட்சியில் இருந்தே நீக்குவதற்கு அறிவிப்பு வெளியாகலாம் என பாமக வட்டாரத்தில் தகவல்கள் வெளியாகி உள்ளது.

அன்புமணியின் படம் தவிர்ப்பு முன்னிறுத்தப்பட்ட காந்திமதி

திண்டிவனத்தில் நேற்று நடந்த பாமக செயற்குழுவில் செயல் தலைவராக அறிவிக்கப்பட்ட அன்புமணியின் பெயர், புகைப்படம் எதுவும் இடம் பெறவில்லை. அண்மையில் தைலாபுரம் தோட்டத்திலிருந்தும் அன்புமணியின் புகைப்படம் இடம்பெற்ற பேனர், சுவரொட்டிகள் கிழித்து எறியப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனிடையே பாமக செயற்குழுவில் ராமதாசின் மூத்த மகள் காந்திமதி பங்கேற்று, மேடைக்கு முன்பாக கீழே முதல் வரிசையில் உட்கார்ந்திருந்தார். அவரை ராமதாஸ் மேடைக்கு அழைத்தார். மேடையிலேயே அவருக்கு நாற்காலி போடப்பட்டு உட்கார வைத்த ராமதாஸ், தன்னுடைய பல போராட்டங்களுக்கு பின் காந்திமதி இருந்ததாகவும் அவரை கட்சியினரிடையே முன்னிறுத்தி பேசினார்.

கூட்டணி குறித்து முடிவெடுக்க ராமதாசுக்கு முழு அதிகாரம்

பாமக செயற்குழுவில் தேர்தல் கூட்டணி முடிவெடுக்க ராமதாசுக்கு முழு அதிகாரம் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 4வது தீர்மானத்தில் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் நம்முடைய கட்சியின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், ஆட்சி அதிகாரத்தில் நாமும் கூட்டாக பங்குபெற்று மக்கள் பணி செய்வதற்கு ஏதுவாக வரும் 2026 சட்டமன்ற தேர்தலிலும், 2029 நாடாளுமன்ற தேர்தலிலும் அதிக இடங்களை கொடுக்கும் நல்ல கூட்டணியை அமைத்து தேர்தலை சந்திக்க நிறுவனர் மற்றும் தலைவர் ராமதாசுக்கு கடந்த கால வழக்கம்போல தற்போது முழு அதிகாரம் அளிக்கப்படுவது, 2026 சட்டமன்ற தேர்தல் பணியை இப்போதே ஆரம்பிப்பதற்கும், வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்கும், கூட்டணி அமைந்தபிறகு எந்தெந்த இடத்தில் நமக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது அங்கு சீட்டுகளை பெற்று அதில் வேட்பாளர்களை ஒரு குழு மூலமாக தேர்வு செய்து நிறுத்தும் முடிவை ராமதாசே செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேர்தலில் போட்டியிட ஏ.பார்ம், பி.பார்மில் கையெழுத்திடும் அதிகாரம் எனக்கே

பாமக மாநில செயற்குழு கூட்டத்தில், பாமக நிறுவனர் ராமதாஸ் பேசும்போது, ‘96 ஆயிரம் கிராமங்கள் சென்று கட்சியை வளர்த்திருக்கிறேன் என் வலியை புரிந்தவர்கள், உணர்ந்தவர்கள் 99 சதவீதம் பேர் இங்கே வந்திருக்கிறார்கள். மீதி உள்ளவர்கள் வீட்டில் இருந்தே ஆதரவு அளிக்கிறார்கள். 2026 சட்டமன்ற தேர்தலில் கூட்டணியில் தேர்தலை சந்திக்க உள்ளதால், அதற்கான அதிகாரத்தை நிர்வாக குழு மற்றும் செயற்குழு எனக்கு வழங்கி உள்ளது. எனவே வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணியை தான் துவங்கி விட்டதால், சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற வேட்பாளர்கள் விருப்ப மனு கொடுக்க ஆயத்தமாகுங்கள். 2026 சட்டமன்ற தேர்தலை கூட்டணியில் தான் பாமக சந்திக்கிறது. தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு தேர்தல் ஆணைய விண்ணப்ப படிவமான ஏ.பார்ம், பி.பார்மில் கையெழுடுத்திடும் அதிகாரம் எனக்கு மட்டுமே உள்ளது. உங்களுக்குள்ள சந்தேகம் அனைத்தும் இப்போது போய் இருக்கும். எங்கே செல்வது என காத்திருந்தவர்களுக்கு இப்போது சந்தேகம் தீர்ந்திருக்கிறது. சந்தேகப்பட்டவர்களுக்கு மருந்து கிடைத்திருக்கிறது. இங்கு வந்தவர்களுக்கு விருந்து கிடைத்துள்ளது’ என்றார். (ஐ)


# கலைஞர் அறக்கட்டளை சார்பில் 8 பேருக்கு ரூ.2 லட்சம் நிதியுதவி




கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவியாக 8 பேருக்கு ரூ.2 லட்சத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் தனது சொந்த பொறுப்பில் அளித்த ரூ.5 கோடியினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை கடந்த 2007 ஜனவரி 10ம் தேதி அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்-பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ.6 கோடியே 27 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2லட்சத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# பவளமலை பகுதியில் வருவாய்த்துறை நிலத்தில் ஆக்கிரமிப்பு அகற்றம்

கோபி அருகே உள்ள பா.வெள்ளாளபாளையம் ஊராட்சி, பவளமலை பிரிவில் இருந்து எஸ்.பி.நகர் சந்திப்பு வரை பலரும் வருவாய்த்துறைக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து காம்பவுண்ட் சுவர் அமைத்தும், வேலி அமைத்தும் பயன்படுத்தி வந்தனர்.

ஆக்கிரமிப்புகளை அகற்றிட பலமுறை வருவாய்த்துறையினர் அறிவிப்பு செய்தும் ஆக்கிரமிப்பை அகற்ற யாரும் முன்வரவில்லை. அதனால் நேற்று போலீஸ் பாதுகாப்புடன் ஜேசிபி மூலம் ஆக்கிரமிப்பு அகற்றும் பணி தொடங்கியது.

கோபி தாசில்தார் சரவணன் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் தலைமையில் பொக்லைன் வாகனம் மூலமாக ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. பல ஆண்டுகளாக இருந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதால் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். (ஐ)

# தீயினால் சுட்ட புண்!



**பொன் ஜெய இளங்கொடி**

உலகத்தில் உள்ள எல்லா பொருள்களும் ஏன் நாம் உயிர் வாழ இன்றியமையாத ஒக்சிஜன் முதற்கொண்டு உணவுகள், மருந்துகள் எல்லாமே வேதிப்பொருட்களே. பொருட்களின் மாற்றங்கள் எல்லாம் வேதியியல் மாற்றங்களே. உணவு செரிமானம் ஆதல், பால் தயிராதல், இட்லி மாவு புளித்தல் இப்படி எல்லாமே வேதியியல் மாற்றங்கள்தான்.

அன்டோயின் லவாய்சியர;( Antoine levoisier) என்ற பிரெஞ்சு விஞ்ஞானியே நவீன வேதியியலின் தந்தை எனப்படுகிறார். சுவாசிக்க ஒக்சிஜன் தேவை என்றும் அதுவே நாம் உண்ணும் உணவை எரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு சக்தியாக மாறுகிறது என்றும் சொன்னவர் அவர். நவீன கால வளர்ச்சிக்கு வித்திட்டவை வேதியியல் கண்டுபிடிப்புகளே. இத்தகைய வேதியியலை நான் பயின்றதை பெருமையாகக் கருதுகிறேன். ஆனாலும் எனக்கு முதலில் இயற்பியல்தான் பிடித்திருந்தது. எனது தந்தை பெண்களுக்கு வேதியியல்தான் பொருத்தமானது என்று அந்தத் துறையை தேர்ந்தெடுக்கச் சொன்னார்கள். எங்கள் தலைமுறை திருமணத்திற்கு முன் தந்தையின் பேச்சையும் திருமணத்திற்கு பின் கணவரின் பேச்சையும் கேட்டோம். தற்போது பிள்ளைகளின் பேச்சை கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இளங்கலை இயற்பியல், விலங்கியல், தாவரவியல் என்ற மூன்று துறைகளுக்கும் வேதியியல் ஒரு துணைப்பாடம். எனவே அதிக மாணவிகளுக்கு அறிமுகமான துறை வேதியியல் துறைதான். பேராசிரியைகள் சூழலுக்கு ஏற்ப கண்டிப்பாகவும் தோழமையுடனும் நடந்து கொள்வார்கள். அவர்கள் தங்கள் எல்லையை நன்கு உணர்ந்து இருந்தார்கள். நிறைய பேர் தமிழ் வழியில் படித்து வந்திருப்பதால், உடைந்த ஆங்கிலத்தில்தான் பேச முடியும். எங்களை ஊக்கப்படுத்தி பேச வைப்பார்கள் உச்சரிப்பைச் சரி செய்வார்கள். ஆங்கிலத்தை நன்றாகக் கற்றுக் கொண்டது அங்குதான்.

எங்கள் துறையில் ஏழு பேராசிரியைகள் இருந்தனர். எங்கள் துறைத் தலைவர் முனைவர் பட்டத்திற்காகவும் , மற்றவர்கள் எம்.ஃபில். பட்டத்திற்காகவும் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த காலத்தில் கைடு (புரனைந) எல்லாம் கிடையாது. பேராசிரியைகளின் நோட்ஸ்தான் மாணவிகளுக்கு படிப்பதற்கு சிறப்பாக பயன்பட்டுக் கொண்டிருந்தன.

எங்களது மூன்று பாட பிரிவுகளுக்கும் மூன்று பேராசிரியர்கள். மூவருமே மிகச் சிறப்பாக நோட்ஸ் கொடுப்பார்கள். அவர்கள் நோட்ஸ் எழுதி வைத்துக்கொண்டு அதை வாசிப்பது என்பது கிடையாது. பாடம் நடத்தும் போதே அப்படியே கொடுப்பார்கள். ரொம்ப இலக்கண சுத்தமாக இல்லாமல் எளிமையான அவரவர்க்கு என்று தனி நடையில் இருக்கும்.

முற்பகல் பாடவேளை ஒரு மணிக்குதான் முடியும். அதற்குள் பசிக்கத் தொடங்கிவிடும். நம்மை அறியாமலே நாம் கைக் கடிகாரத்தில் மணி பார்த்தால் போதும், பாடத்தை விட்டு விட்டு அனுபவப் பாடத்தை சொல்லித் தரும் பேராசிரியர் எங்கள் துறையில் உண்டு.

நாள்தோறும் தயிர்சோறும், மாவடு ஊறுகாயும் கொண்டுவரும் தோழியின் மதிய உணவு டப்பாவை திறந்து மூடும் குறும்புத் தோழிகளும் உண்டு. தயிர் சோற்றுடன் ஊறுகாயின் வாசம் வகுப்பு முழுவதும் நிறைந்திருக்கும். எங்களுடன் இணைந்து அவர்களும் சிரிப்பார்கள். திட்டியது இல்லை.

வேதியியல் ஆய்வுக்கூடம் பெரியது. ஆறு பேர் எதிரும் புதிருமாக மொத்தம் 12 பேர் செய்முறை செய்ய வசதியாக பெரிய மேடை. அதன் நடுவில் செல்ஃப்களில் ரியேஜன்ட்ஸ் வைக்கப்பட்டிருக்கும். கீழே இருக்கும் கப்போர்டில் நமது அப்பரெட்டஸை வைத்துக் கொள்ளலாம். ஹைட்ரஜன் சல்பைடு அப்பரெட்டஸ் ஒரு மூலையில் அமைக்கப்பட்டிருக்கும். அதன் அழுகிய முட்டை நாற்றத்தோடு தான் செய்முறை செய்ய வேண்டும். பியூசி படிக்கும் போது கஷ்டமாக இருந்தது. பின்னர் பழகி விட்டது. கடைசியாக ஒரு அறையில் வேதியியல் செய்முறைக்கு உரித்தான தனித்துவமான கருவிகள் இருக்கும். துல்லியமாக எடை பார்க்கப் பயன்படும் வேதியியல் தராசில் எங்களது செயினை எடை பார்த்தோம். மிகத் துல்லியமாக எடை பார்க்கப் பயன்படும் குசயஉவழையெட நநபைாவ டீழஒ இன்னும் என்னிடம் பத்திரமாக உள்ளது. தசம எண்களில் புள்ளிக்குப் பின் மூன்றாவது எண்ணைக் கூடத் துல்லியமாக எடுப்பது இந்தக் கம்பிதான். இது இல்லை என்றால் வேறு Fractional weight Box தான் வாங்க வேண்டும். பேராசிரியர்கள், தன்னார்வமாக பாடங்களில் வரும் எளிய சோதனைகளை செயல்முறையாக செய்து காண்பிப்பார்கள். ஒருமுறை இன்-ஆர்கானிக் பாடம் எடுக்கும் பேராசிரியர் சோடியம் நைட்ரேட்டையோ அல்லது பொட்டாசியம் நைட்ரேட்டையோ அடிப்படையாக வைத்து ஒரு கலவையை வகுப்பறையின் பின்னால் வடாகம் ஊற்றுவது போல் ஊற்றி வைத்தார்கள். அவை ஒவ்வொன்றாக பொட்டு வெடி வெடித்தது போல் வெடித்தது. அடுத்து எப்போது வெடிக்கும் என காத்திருந்தது திரில்லாக இருந்தது. ஒருமுறை பாடத்திட்டத்தில் இல்லாத செய்முறையாக 5 பழங்களில் விட்டமின் சி மற்றும் அசிடிட்டி அளவுகளைக் கண்டுபிடித்தோம். இன்னொரு முறை மை, பற்பொடி, லிப் ஸ்டிக், கிரீம் என பத்து பொருள்கள் செய்தோம். எங்கள் வகுப்பில் பெரும்பாலானோர் லிப் ஸ்டிக் போட்டிருந்தார்கள். எங்களை எல்லோரும் வியப்புடன் பார்த்தபோது, நாங்கள் செய்தது என்று பெருமை அடித்துக் கொண்டோம்.

ஒருமுறை செய்முறை செய்யும்போது அரை மணி நேரம் கரைசலை கொதிக்க விட வேண்டி இருந்தது. அப்போது மதிய இடைவேளை பேராசிரியர்கள் சென்று விட்டார்கள். அரை மணி நேரத்தில் வந்து விடலாம் எந்த நம்பிக்கையில் நாங்களும் கரைசலை கொதிக்க விட்டபடி சாப்பிடச் சென்று விட்டோம். அவ்வாறே அவசர அவசரமாக சாப்பிட்டு விட்டு வந்து பார்க்கும்போது புன்சன் பர்னர் (டீரளெநெ டீரசநெச) எரியவில்லை. கேஸ் யூனிட் அணைக்கப்பட்டு இருந்தது. சற்று நேரத்தில் எங்கள் துறைத் தலைவர், பொருளாதாரத் துறைத் தலைவரான அவர்களுடைய தோழியுடன் வந்தார்கள். மற்றவர்களுக்கு பிற்பகல் வகுப்புகள் தொடங்கவில்லை. பர்னரை எரிய விட்டுச் சென்றதால் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் பெரிய பாதிப்பு ஏற்படும் என்று நன்றாகத் திட்டி வெளியே போகும்படிக் கூறிவிட்டார்கள். நாங்கள் மன்னிப்பு கேட்க தயாரான பின்னும் கொஞ்சமும் சட்டை பண்ணாமல் கோபமாகப் பேசி வெளியே அனுப்பி பாதி கிளாசால் ஆன கதவை படார் படார் என்று அடித்து மூடி விட்டார்கள்.

இவர்கள் திட்டும்போது அவர்களது தோழி ஒரு கிண்டல் சிரிப்புடன் இருந்தார்கள். எங்களுக்கு அது ரொம்ப கடுப்பாக இருந்தது. பேராசிரியர்கள் போகும்போது பர்னரை எரிய விட்டுச் செல்லக்கூடாது என்று அறிவுறுத்தி இருக்க வேண்டும். இன்னொரு துறை பேராசிரியர் முன் எங்களை திட்டியது, வெளியே தள்ளி கதவை சாத்தியது எங்களுக்கு ரொம்ப அவமானமாகவும், கோபமாகவும் இருந்தது. மதிய இடைவேளை முடிந்து வகுப்புகளுக்கு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள், பேராசிரியர்கள், முதல்வர் முதற் கொண்டு நாங்கள் வெளியே நின்று கொண்டிருந்ததை வேடிக்கை பார்த்தபடி சென்றார்கள் (முதல்வர் எதுவும் கேட்கவில்லை). அந்தக் கடுப்பும் சேர்ந்து கொண்டது. எனவே நாங்கள் மன்னிப்பு கேட்பதில்லை என்று தீர்மானித்தோம்.



எங்களது பொருள்கள் அனைத்தும் ஆய்வகத்தின் உள்ளே இருந்ததால், டே ஸ்காலர் மாணவிகளுக்கு விடுதி மாணவிகள் பணம் கொடுத்து வீடு போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் வீட்டில் என்ன கூறினார்களோ தெரியவில்லை. மறுநாள் வகுப்புகளுக்குச் சென்றோம். எப்போதாவது கரும்பலகையில் திருக்குறள் எழுதி போடுவோம். அன்று "தீயினால் சுட்ட புண்..."என்ற குறள் எழுதிப் போட்டோம்.

துறைத் தலைவர் வருவதற்கு முன்பே எங்கள் மேல் மிகுந்த அன்பு கொண்ட எங்கள் வகுப்பு பேராசிரியை ஓடி வந்தார்கள். துறைத்தலைவர் கோபமாக இருப்பதாகவும் மன்னிப்பு கேட்டால்தான் வகுப்புகளுக்கு பேராசிரியைகள் வருவார்கள் என்றும் கூறிச் சென்றார்கள் (கடைசி நாள் அவர்கள் வகுப்பில் மட்டும்தான் நாங்கள் அழுதோம்). துறைத்தலைவர் வந்ததும், வகுப்புத் தலைவர் மன்னிப்பு கேட்பதைத் தொடங்கி வைக்க எல்லோரும் கோரசாக அவளுடன் சேர்ந்து கொண்டோம். அப்போதும் கொஞ்சம் டோஸ் விட்டு விட்டு வகுப்புகளுக்கு அனுமதி அளித்தார்கள். ஆய்வகத்திற்குச் சென்று பொருள்களை எடுத்துக் கொண்டோம். இப்போது நினைத்துப் பார்த்தால் நாங்கள் அன்றே மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. நான் பி.ஜி. அசிஸ்டன்டாக வேலை பார்த்தபோது ஆய்வகத்தை விட்டு கிளம்பும்போது எல்லா பர்னர்களும் அணைக்கப்பட்டு இருக்கிறதா என்று சரி பார்த்து விட்டுதான் செல்வேன். காரணம் அன்று அவர்கள் காட்டிய கண்டிப்புதான். அதன் தீவிரத் தன்மை இந்த வயதில்தான் புரிந்தது.

**இயற்பியல்**

எங்கள் முதல் துணைப்பாடம் - இயற்பியல். அது நான்கு பருவங்கள் ஒவ்வொரு பருவத்திற்கும் 50 மதிப்பெண்கள். பெரும்பாலோர் ஐம்பதுக்கு 40க்கு மேல் மதிப்பெண்கள் பெறுவர் அந்த அளவிற்கு சிறப்பாகப் பாடம் நடத்துவார்கள். இயற்பியல் செய்முறைகளும் ரொம்ப சுவாரசியமாகவும் புதுமையாகவும் இருக்கும். அதன் துறைத்தலைவர் சிஸ்டர் நிர்மலா மேரி, செய்முறைகளைப் பொறுமையாக, தெளிவாகச் சொல்லித் தருவார். மிகவும் அன்பானவர்.

இயற்பியல் துறையில் செமினார் எடுக்கச் சொல்வார்கள். மேடை பயத்தால் நிறைய பேர் மறுத்து விடுவார்கள். நான் சில செமினார்கள் எடுத்துள்ளேன். அன்று சேலைதான் உடுத்த வேண்டும். மற்றபடி அரைத்தாவணி தான் உடுத்தி இருப்போம். பேராசிரியை செமினாரின் இடையே மாணவிகளிடம் கேள்வி கேட்கச் செய்து செமினாரை கலகலப்பாக்குவார்கள்.

**கணக்கு**

அடுத்த துணைப்பாடம் கணக்கு. இயற்பியலுக்கும் கணக்கு துணைப்பாடம் என்பதால் அவர்களுக்கும், எங்களுக்கும் ஒன்றாகவே வகுப்பு நடக்கும். கணக்குப் பேராசிரியர்களும் நன்றாகவே பாடம் நடத்துவார்கள். கணக்குப் பாடம் மிகவும் சவாலானது. நாள்தோறும், வீட்டுப்பாடம் செய்வது என்பது 'தலையை பிச்சிக்கும்' என்று சொல்லும் படி சிரமமாகவே இருக்கும். கணக்குதான் முதல் பாட வேளை. கணக்குப் பேராசிரியர் வகுப்புக்கு மாணவர்கள் பிந்தி வந்தால் நேராக உள்ளே வந்து உட்கார்ந்து கொள்ளலாம் எக்ஸ்கியூஸ் மீ என்று கேட்டு அதற்கு அவர்கள் பதில் சொல்ல என்று நேரத்தை வீணாக்க வேண்டாம் என்பது அவரது கருத்து. அல்லாமல் பிந்தி வந்தால் அலுவலகத்தில் 25 பைசா கட்டி சீட்டு வாங்கி வர வேண்டும்.

பி யு சி யில் ஒரு புது பேராசிரியர் கணக்குப் பாடம் எடுத்தார்கள். அவர்கள் பயந்த சுபாவம். பாடம் எதுவும் புரியவில்லை. பள்ளி கணக்கிற்கும் கல்லூரி கணக்கிற்கும் துளி கூட தொடர்பு இராது (தற்போதும் பதினொன்றாம் வகுப்பு கணக்கு பாடம் அவ்வாறு தான் உள்ளது). கிட்டத்தட்ட பத்து நாட்கள் கழித்து எங்கள் வகுப்பில் சில மாணவர்கள் முதல்வரிடம் சென்று புகார் கொடுத்தார்கள். உடனே அவர்களை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள். இதை எதற்கு சொல்கிறேன் என்றால் எந்த அளவு முதல்வர் அணுகுவதற்கு எளியராகவும் படிப்பில் அக்கறை கொண்டவராகவும், மாணவிகளின் பேச்சை மதிப்பவராகவும் இருந்தார் என்பதற்காகதான்.

**மொழிப்பாடங்கள்**

தமிழ், ஆங்கிலம் இரண்டுமே முதல் இரு ஆண்டுகள்தான். எல்லோருமே நன்றாக பாடம் எடுப்பார்கள். முதல் வருடம் வந்த தமிழ்ப் பேராசிரியர் கம்பீரமான தோற்றத்துடன் பேச்சாளர்களைப் போல் இலக்கியத்தில் இருந்து மேற்கோள் காட்டி பாடம் எடுப்பார்கள். கவிதைப் போட்டிகளுக்கு என்னிடம் கவிதை வாங்கி அனுப்புவார்கள். அப்படி மாணவிகளின் திறமைகளை வெளிக் கொணர்வதில் சிரத்தை எடுத்துக் கொண்டார்கள்.

ஆங்கில பேராசிரியர்களின் உச்சரிப்பு ரொம்ப ஸ்டைலாக இருக்கும். ஆங்கிலத்துறையில் நிறைய பேராசிரியர்கள் பார்க்கவும் ஸ்டைலாக இருப்பார்கள். பியூசி- யில் ஆங்கில பாடத்தில் ஆறு துணைப்பாட நூல்கள். நிறைய பேர் தமிழ் வழிக் கல்வி என்பதால் பாடம் எடுப்பது சவாலான விஷயம் தான். அதில் உலகைச் சுற்றி எண்பது நாட்கள் (யுசழரனெ வாந றழசடன வை 80 னுயலள) என்ற துணைப்பாட நூல் மறக்க முடியாத ஒன்று. அந்த துணைப்பாட நூலால் பல நாட்டு பண்பாடு, கலாச்சாரங்கள் கொஞ்சமாவது அறிமுகம் ஆனது.

அனைத்து பேராசிரியர்களுமே வாழ்வியலில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் அது மிகை இல்லை.

# ஏமனில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கேரள நர்சுக்கு ஜூலை 16ல் தூக்கு



சானா: ஏமனில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கேரள நர்சுக்கு ஜூலை 16ஆம் தேதி தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கேரளாவை சேர்ந்த நர்ஸ் நிமிஷா பிரியா. 2008ஆம் ஆண்டு ஏமன் நாட்டிற்கு சென்ற அவர் தனியாக கிளினிக் தொடங்க அந்த நாட்டு சட்டப்படி உள்ளூரை சேர்ந்த தலால் அப்தோ மஹ்தியுடன் இணைந்தார். இருவரும் சேர்ந்து 2014ல் தனியாக கிளினிக் தொடங்கினார்கள். அதன்பிறகு அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதுதொடர்பான புகாரில் மஹ்தி 2016ல் கைது செய்யப்பட்டார்.

சிறையில் இருந்து வெளியே வந்த அவர் தொடர்ந்து நர்ஸ் நிமிஷா பிரியாவை மிரட்டினார். பாஸ்போர்ட்டை கொடுக்க மறுத்தார். இதையடுத்து பாஸ்போர்ட்டை மீட்க மஹ்திக்கு மயக்க மருந்து கொடுத்த போது அவர் திடீரென இறந்தார். இதனால் பயந்து போன நிமிஷா நாட்டை விட்டு வெளியேற முயன்ற போது கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் அவர் மீது ஏமன் குடியரசின் சுதந்திரம், ஒற்றுமை அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுதல், ஆயுதப்படைகளை பலவீனப்படுத்தும் செயலைச் செய்தல் மற்றும் கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் 2018ஆம் ஆண்டு கொலைக்குற்றவாளி என தீர்ப்பளித்து மரண தண்டனை விதித்தது. அவரது தண்டனையை ஏமன் உச்ச நீதித்துறை கவுன்சில் 2023 நவம்பர் மாதம் உறுதி செய்தது. இதையடுத்து நிமிஷாவை காப்பாற்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆனால் அனைத்து முயற்சியும் தோல்வியில் முடிந்தது. இறுதியாக வரும் 16ஆம் தேதி நிமிஷாவுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட உள்ளது. இதற்கான ஒப்புதலை ஏமன் ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ளது. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)



# வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட நேபாளம்- சீனா இணைப்பு பாலம்:

## 18 பேர் மாயம்

வெள்ளப்பெருக்கினால் நேபாளம்- சீனா இணைப்பு பாலம் அடித்துச் செல்லப்பட்டதில் 18 பேர் மாயமாகி உள்ளனர். சீனாவில் நேற்று முன்தினம் முதல் பருவமழை தொடங்கியுள்ளது. பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் அண்டை நாடான நேபாளத்தின் போத்தேகோஷி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து ரசுவா மாவட்டத்தில் உள்ள நேபாளம் -சீனாவை இணைக்கும் நட்பு பாலம் என்று அழைக்கப்படும் மிடேரி பாலம் நேற்று அதிகாலை மழை வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்டது. இதில் 6 சீனர்கள் உட்பட 18 பேர் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு மாயமாகி உள்ளனர். அவர்களை தேடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வெள்ளப்பெருக்கில் ஏராளமான வீடுகள் மற்றும் வாகனங்களும் அடித்துச்செல்லப்பட்டுள்ளன. இதனிடையே தாட்லிங் மாவட்டத்தில் உள்ள திரிசூலி ஆற்றில் இருந்து இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது. அவர்கள் யார் என்பது இன்னும் அடையாளம் காணப்படவில்லை


# காசாவில் குண்டு வெடிப்பு 5 இஸ்ரேல் வீரர்கள் பலி



இஸ்ரேல் படைகள் நேற்று முன்தினம் ஏமனில் உள்ள ஹவுதி இலக்குகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக ஹவுதி படைகளும் இஸ்ரேலின் முக்கிய தளங்களை குறிவைத்து தாக்குதலில் ஈடுபட்டன. இந்நிலையில் வடக்கு காசாவில் 5 இஸ்ரேல் வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 2 வீரர்கள் காயமடைந்துள்ளனர். இஸ்ரேல் வீரர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தபோது குண்டுகள் வெடித்ததால் அவர்கள் பலியானதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. பலியான மற்றும் காயமடைந்த வீரர்களை மீட்பதற்காக சென்றவர்கள் மீதும் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. இதனிடையே காசாவில் இரண்டு இடங்களில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதாரதுறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1060 பேர் பலி- ஈரான்-இஸ்ரேல் உடனான போரின்போது பலியானவர்கள் குறித்த புதிய விவரங்களை ஈரான் வெளியிட்டுள்ளது. ஈரானின் தியாகிகள் மற்றும் வீரர்கள் விவகாரங்கள் அறக்கட்டளை தலைவர் சையீத் ஓஹாடி நேற்று முன்தினம் இது குறித்து தெரிவித்துள்ளார். இஸ்ரேலுடன் நடந்த போரில் ஈரானில் 1060 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# செங்கடலில் லைபீரிய கப்பல் மீது ஹவுதி தாக்குதல்



செங்கடலில் லைபீரிய கப்பல் மீது ஹவுதி நடத்திய தாக்குதலில் கடற்படை வீரர்கள் 2 பேர் கொல்லப்பட்டனர். செங்கடலில் நேற்று லைபீரிய நாட்டுக்கு சொந்தமான சரக்கு கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குல் நடத்தினர். இதில் கடற்படை வீரர்கள் 3 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர். செங்கடலில் மீண்டும் தொடரும் தாக்குதலால் கடல்வழி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சிறைச்சாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துஷார உப்புல்தெனிய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க, சந்தேக நபருக்கு 25,000 ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் தலா 2 மில்லியன் ரூபாய்க்கான இரண்டு சரீரப் பிணைகளுடன் பிணை வழங்கினார்.

சந்தேக நபர் இலங்கையில் உள்ள எந்த சிறைச்சாலைக்கும் நுழைவதைத் தடை செய்யவும் நீதவான் உத்தரவிட்டார்.

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை மாநகர சபை முன்னர் ஒரு நகராட்சி மன்றமாக இருந்ததுடன் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பிறகு மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டது.

இலங்கை நிருவாக சேவையை சேர்ந்த சிவராஜா தற்போது கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளராக பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் மாகாண விளையாட்டு துறை திணைக்கள பணிப்பாளர், ஆளுநர் செயலக உதவி செயலாளர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.

## எம்.பியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் ஊடாகப் பத்தாவது பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு உஸ்ஹெட்டிகே தொன் நிசான்த ஜயவீர இவ்வாறு தேசியப் பட்டியலின் ஊடாக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைத் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஜூலை 07ஆம் திகதி வெளியிட்டிருந்த நிலையில் அவர் புதன்கிழமை (09) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகமாகப் பணியாற்றிய அவர், குறித்த திணைக்களத்தின் பல்வேறு பதவிகளில் 25 வருடங்களுக்கு அதிகமான காலம் பணியாற்றியுள்ளார். 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல் டிசம்பர் வரையில் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகவும் பணியாற்றிய இவர், அதன் பின்னர் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராகவும் பணியாற்றினார்.

களனி பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞானத்தில் விசேட பட்டத்தைப்பெற்ற ஜயவீர, குறித்த பல்கலைக்கழகத்தில் பொருளியலில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வரிவிதிப்புத் தொடர்பான வணிக முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அத்துடன், களனி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பெற்றுள்ள இவர், இந்தியா, ஜப்பான், மலேசியா, தாய்லாந்து, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகள் பலவற்றில் பொருளியல் மற்றும் வரிஅறவீடு குறித்து பாடநெறிகளைப் பெற்றுள்ளார்.

## சுழியோடிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கற்கும் 17 வயது ராம் மூர்த்தி தமிழ் மாறன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சையை முடித்துவிட்டு, தேர்வு முடிவுகளுக்காகக் காத்திருந்த குறித்த மாணவன் சக பாடசாலை மாணவர்களுடன், கணினி வகுப்புகளுக்குச் செல்வதாகக் கூறி, ஹட்டனில் உள்ள சிங்கமலை நீர்த்தேக்கத்திற்கு புகைப்படம் எடுக்க சென்றுள்ளார்.

பின்னர் குறித்த மாணவர் அட்டை கடிக்குள்ளானதால் காலில் காயம் ஏற்பட்டதாகவும், இரத்தத்தை கழுவ நீர்த்தேக்கத்தில் இருந்த பாறையில் ஏறி இரத்தத்தை கழுவி கொண்டிருந்த வேலையிலேயே அம் மாணவன் நீர்தேக்கதில் விழுந்துள்ளதாக சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவனின் பெற்றோர் வெளிநாடு சென்றுள்ளதாகவும், மீட்கப்பட்ட மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு சிறப்பு தடயவியல் நிபுணரிடம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேலும் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிகின்றோம். ஏன் இவற்றை இலங்கை அரசாங்கம் ஆய்வு செய்யவில்லை? DNA பரிசோதனை இலங்கை அரசாங்கத்திற்கு மேற்கொள்ள வசதிகள் இல்லாத நிலையில் ஏன் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தின் உதவியை நாட தயங்குகின்றது?

அரசாங்கம் செய்ய குற்றங்களை அரசாங்கம் விசாரிப்பதில் சிக்கல்கள் உள்ளன என ஜனாதிபதி கூறியுள்ளார். இதானாலேயே நாங்கள் சர்வதேச விசாரணை ஒன்றினை எதிர்பார்க்கின்றோம்.

அரசாங்கம் ஊழல் ஒழிப்பிற்கு விசேட அலுவலகம் ஒன்றினை உருவாக்க யோசிப்பது போல் ஏன் மனித உரிமை மீறல்களை விசாரிக்க அலுவலகம் அமைக்கவில்லை? ஆரையம்பதியில் கொல்லப்பட்ட விஜிதா, மட்டக்களப்பில் கொல்லப்பட்ட ரியாயா, பிரேமினி, மனித புதைகுழி உள்ள கொக்குத்தொடுவாய், மாத்தளை, செம்மணி, இன்னும் அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்படாத பிள்ளையானின் தீவுச்சேனை ஆகியவற்றின் மீது ஏன் இன்னும் விசாரணை மேற்கொள்ளவில்லை?

சட்டத்தில் இணையவழி மூலமாக வாக்குமூலம் பதிவு செய்வதற்கு இயலுமாக இருப்பினும் தற்போது பிள்ளையானுக்கு எதிராக சாட்சி அளிக்க தயாராக உள்ள அசாத் மௌலானாவின் வாக்குமூலமானது பதிவு செய்யப்படவில்லை.

அசாத் மௌலானா தனது வாக்குமூலத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு ருE இற்கு வழங்கிய போதிலும் அவ் அறிக்கையினை இலங்கை அரசாங்கம் இன்றளவிலும் கேட்டுப்பெறவில்லை.

2004 ஆம் ஆண்டிலிருந்து இந் நாட்டில் இஸ்லாமிய அடிப்படை வாதத்தினை உருவாக்கியது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே. கலில் (ஓட்டமாவடி) மற்றும் பாயிஸ் (காத்தான்குடி) எனும் அழைக்கப்படும் இருவர் தற்போது வரை இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

கலில் என்பவர் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஐயாவின் கொலை வழக்கில் பிள்ளையானுடன் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட ஒருவர். இலங்கை அரசாங்கம் இன்று வரை இவர்களிடம் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை. நியாஸ் எனும் ஒருவர் சாய்ந்தமருதில் சுட்டுக்கொல்லப்பட்டவர். இவர் நிந்தவூர் 'Safe House' இல் இருந்ததாக இராணுவ புலனாய்வுத் துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சென்ற போதும் அவரை பிடிக்க முடியவில்லை. ஆனால் இவர் ஒரு முக்கிய சாட்சியாக கருதப்படக்கூடிய ஒருவர். ஆனால் இச் சாட்சியை மூடி மறைத்துள்ளனர்.

சாரா எனப்படும் புலஸ்தினியினுடைய 3 ஆவது DNA அறிக்கையின் பிற்பாடே அவர் இறந்து விட்டார் என மொழியப்பட்டது. இரு தடவைகளும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் அவரை ஏன் இனங்காண முடியவில்லை? இவருடைய தேசிய அடையாள அட்டை அம்பாறை நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சாராவினுடைய அனைத்தும் தீக்கிரையாகி விட்டன என்றால் எவ்வாறு தேசிய அடையாள அட்டை மாத்திரம் கைப்பற்றப்பட்டது? இஸ்லாமிய அடிப்படை வாதத்தை வைத்துக்கொண்டு அரசியல் இலாபம் தேட நினைக்கும் கட்சிகள் உள்ளன. "மினுவாங்கொட போன்ற இடங்களில் இஸ்லாமியர்களின் கடைகளை எரித்ததற்கு பின்புலத்தில் சரத் வீரசேகர என்பவரே உள்ளார்." என மைத்திரிபால சிறிசேன அவர்களின் குரல் பதிவும் உள்ளது. ஆனால் ஏன் இதுவரை காலமும் சரத் வீரசேகரவிடம் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை? ரொஹான் குணரட்ன என அழைக்கப்படும் விரிவுரையாளர் என்பவர் சிங்கப்பூரில் உள்ள தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் ஜுநஉரசவை ஹநயடநஉந பற்றிய விரிவுரையாளர். ஜுஉ தீவிரவாத அமைப்பே இக் குற்றங்களுக்கு காரணம் என இவர் இரு மாதங்களுக்கு முன்பே கூறியுள்ளார். அரசாங்க அமைச்சர் பிள்ளையானே இக் குற்றங்களுக்கு பின்னணி சூத்திரதாரி எனக் கூறுகின்றார். ரொஹான் குணரட்ன என்பவர் பொய்யான வாக்குறுதிகளை மொழிதமைக்காக கனடாவில் வழக்கும் பதிவு செய்யப்பட்டது. ஆகவே இது தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறாவூர் பகுதியை சேர்ந்த முஹமட் ரசாக் என்பவரது துப்பாக்கி தொலைந்தது. இத் துப்பாக்கி நுவரெலியாவில் உள்ள ரசாக் என்பவரிடம் இருப்பதாக அவர் கைது செய்யப்பட்டார். இவர் 'Islamic Centre' எனும் அமைப்பில் உள்ளார். இத் துப்பாக்கி சயீக் எனப்படுபவரிடமிருந்து ரசாக் என்பவருக்கு விற்கப்பட்டதாகவே தகவல். இத் துப்பாக்கியினையே ரில்வான் சாய்ந்தமருதில் ஏற்பட்ட குண்டு வெடிப்பின் போது வைத்திருந்தவர் என தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஏன் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பனவாகும்

## உயிர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கொண்டு வந்திருந்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன அதனை வழிமொழிந்தார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து பிள்ளையானுக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தது என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. விசாரணைக்குத் தடங்கல் வரும் என்பதால் அனைத்து தகவல்களையும் வெளியிட முடியாது. விசாரணைகள் உரிய வகையில் இடம்பெற்று வருகின்றன." - என்றார்.

# மன்னார் நகர சபையின் கன்னி அமர்வில் குழப்பம்

மன்னார் நகர சபையின் கன்னி அமர்வு, மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தலைமையில் புதன்கிழமை (9) இடம்பெற்ற போதும், சபையில் தொடர்ச்சியாக குழப்ப நிலை ஏற்பட்ட நிலையில் சபை யை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் சபை பிரிதொரு தினத்திற்கு நகர முதல்வர் ஒத்தி வைத்தார். மன்னார் நகர நகர முதல்வர் டானியல் வசந்தன் தலைமையில் புதன்கிழமை (9) காலை 10 மணியளவில் முதல் அமர்வு ஆரம்பமானது.

இதன் போது ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் சபை அமர்வு ஆரம்பமாகியது. அதனை தொடர்ந்து உறுப்பினர்களின் கன்னி உரை இடம் பெற்றது. அதன் போது சென்ற கூட்டறிக்கை வாசிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நகர சபை அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டை (பட்ஜெட்) ஏற்றுக் கொண்டு ஒத்துழைப்பை வழங்க சபையில் தவிசாளரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும், மன்னார் நகர சபை உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்றனி டேவிட்சன் எதிர்ப்பை தெரிவித்த நிலையில் பல உறுப்பினர்கள் குறித்த விடயத்திற்கு எதிர்ப்பை தெரிவித்தனர்.

இன்னும் ஒரு தரப்பினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதீட்டை தங்களினால் ஏற்றுக் கொள்ள முடியாது என பல உறுப்பினர்கள் சபையில் தெரிவித்த நிலையில் சபையில் தொடர்ச்சியாக அமைதியின்மை ஏற்பட்டது.

இந்த நிலையில் சபையின் செயல்பாடுகள் தவிசாளரினால் அரை மணித்தியாலம் ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் சபையின் செயல்பாடுகள் இடம் பெற்ற போதும் நகர சபை அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டை ஏற்றுக் கொள்ள உறுப்பினர்கள் மறுத்தனர்.

இதனால் நீண்ட நேரம் சபையில் அமைதியின்மை இடம் பெற்றபோது சபை உறுப்பினர்களுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. மேலும் குறித்த பாதீடு குறித்து சபையின் செயலாளரின் கருத்துக்களை உறுப்பினர்கள் எதிர் பார்த்த போதும் செயலாளர் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் நகர சபை உறுப்பினர்கள் சிலர் செயலாளருக்கு எதிராக கருத்தை தெரிவித்தனர். இதனால் நீண்ட நேரம் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

இதனால் குறித்த பாதீட்டை ஏற்றுக் கொள்ளவோ அல்லது அங்கீகரிக்க முடியாது என பெரும்பாலான உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனால் உறுப்பினர்களுக்கு இடையில் தொடர்ச்சியாக கருத்து முரண்பாடு ஏற்பட்ட நிலையில் சபையினை முதல்வர் பிரிதொரு தினத்திற்கு ஒத்தி வைத்தார்.

இந்த நிலையில் சில உறுப்பினர்கள் தமது அரசியல் கட்சிகளின் அதிருப்தி நிலை குறித்தும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

சபை அமர்வை ஒத்தி வைத்தது குறித்து நகர சபையின் முதல்வர் டானியல் வசந்திடம் வினவிய போது,,,

-மன்னார் நகர சபையின் தலைவர் உப தலைவர் தெரிவின் பின்னர் சபையின் முதல் அமர்வு இன்று புதன்கிழமை (9) காலை இடம்பெற்றது. சபை அமர்வுக்கான நிகழ்ச்சி நிரல் அனைத்து உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே அனுப்பி வைக்கப்பட்டது. நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக சபை ஒன்று கூடியது.

நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக சபை நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது, முன்னை நாள் சபை உறுப்பினர்கள் சிலரினால் சபையை குழப்பும் வகையில் வருகை தந்து நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் பட்ட வகையில் அவர்கள் செயல்பட்டு குழப்பத்தை ஏற்படுத்தினர்.

இதன் போது புதிதாக பாதீட்டை தயாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். எனினும் மக்களினால் திட்டமிடப்பட்டு அதிகாரிகளினால் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டிய முக்கிய வேலைத்திட்டங்களை மக்கள் ஊடாக தயாரிக்கப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட்டது. அதற்கு அமைவாக நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. இன்னும் அரைவாசி வேலைத் திட்டங்களே முன்னெடுக்கப்பட வேண்டி உள்ளது. அதனை காரணம் காட்டி சபை அமர்வை குழப்பும் வகையில் சபை தவிசாளரின் கட்டளைக்கு இணங்காமல் சபையை குழப்பும் வகையில் அவர்கள் செயல்பட்டார்கள். அதன் காரணமாக சபை ஒத்திவைக்கப்பட்டது.

நகர சபையை பொறுப் பேற்றதன் பிற்பாடு நிறைய ஊழல் மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றை வெளியில் கொண்டு வர முயற்சித்த போது குறித்த ஊழல் விடயங்கள் வெளியில் வந்து விடக் கூடாது என்பதற்காக இச் சபையை எவ்வாறாவது குழப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்களின் நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

எனவே இவ்வாறான வர்களுக்கு மக்கள் தான் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2025 வெளியிடப்பெற்றது.